தரவேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து அமருகிறேன்.

(ஆஐ) செஞ்சி, சூரப்பன்தாங்கல் கிராமம், மின்சாரம் தாக்கி உயிரிழந்தவர் குடும்பத்திற்கு நிவாரணம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதே கோரிக்கையை மாண்புமிகு உறுப்பினர் திரு. மஸ்தான் அவர்களும் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான் அவர்கள்.

***திரு. கே.எஸ். மஸ்தான்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செஞ்சி தொகுதி, மேல்மலையனூர் வட்டம், பெருவளூர் ஊராட்சி, சூரப்பன்தாங்கல் கிராமத்தில் முருகேசன் மகன் முனுசாமி என்பவர் விவசாயப் பணியில் ஈடுபட்டிருந்தபோது மின்சாரம் தாக்கி உயிரிழந்திருக்கிறார். அவருடைய குடும்பத்திற்கு நிவாரணம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவருக்கு செல்வி என்கிற மனைவியும் 2 ஆண் குழந்தைகளும் இருக்கிறார்கள். செல்விக்கு சத்துணவுக் கூடத்தில் உதவியாளர் பணி வழங்கவும், அதிகபட்சமாக 10 இலட்சம் ரூபாய் இழப்பீடு வழங்கவும் அரசின் கவனத்தை தங்கள் வாயிலாக ஈர்த்து அமருகிறேன்.*

(ஆஒ) பொள்ளாச்சி, மின்சாரம் தாக்கி உயிரிழந்தவர் குடும்பத்திற்கு நிவாரணம், கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்குதல், உழவர் பாதுகாப்புத் திட்ட நிவாரணத் தொகையை உயர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்.

***மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்):** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், கோட்டூர் மலையாண்டிபட்டினம் கிராமத்தில் குடியிருந்து வந்த விவசாயி திரு. பி. ஞானகிராமன் என்பவர், தோட்டத்தில் மின்சாரம் தாக்கி கடந்த 19—5—2017 அன்று இறந்துவிட்டார். இதுகுறித்து அவரது தாயார் கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் உரிய நிவாரணம் கேட்டு விண்ணப்பித்துள்ளார். அவருக்கு உரிய நிவாரணத் தொகையை வழங்கிட வேண்டுமென்று தங்களின்*

வாயிலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

கோவை மாவட்டம், பொள்ளாச்சியில் இருபாலர் பயிலும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைப்பதற்கான இடம், கட்டடம், விளையாட்டு மைதானம் உள்ளிட்ட அனைத்தும் தயார் நிலையில் உள்ளது. அதையும் இந்த ஆண்டே அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயப் பணியில் ஈடுபடும் தொழிலாளர்கள், விவசாயிகள் பாம்பு கடித்து இறக்கும்பொழுது, உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் அவர்களுக்கு 1 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. அந்தத் தொகையை 3 இலட்சம் ரூபாயாக உயர்த்தித் தரவேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டு அமருகிறேன்.

(ஆஏ) திருவையாறு தொகுதி, திருப்பாளனம் கிராமம், மின்சாரம் தாக்கி உயிரிழந்த மற்றும் சாலை விபத்தில் உயிரிழந்தவர்கள் குடும்பங்களுக்கு நிவாரணம்

(ஆஐ) செஞ்சி, சூரப்பன்தாங்கல் கிராமம், மின்சாரம் தாக்கி உயிரிழந்தவர் குடும்பத்திற்கு நிவாரணம்

(ஆஒ) பொள்ளாச்சி, மின்சாரம் தாக்கி உயிரிழந்தவர் குடும்பத்திற்கு நிவாரணம், கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்குதல், உழவர் பாதுகாப்புத் திட்ட நிவாரணத் தொகையை உயர்த்துதல்

—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், திருப்பாளனம் ஊராட்சியைச் சேர்ந்த திரு. கலியபெருமாள் என்பவரின் மகன் திரு. செந்தில்குமார் என்பவர் கடந்த 12–7–2017 அன்று கோயிலில் பந்தல் அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தபோது மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியும், விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர்*

2017 ஜூலை 19] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

வட்டம், பெருவளூர் மதுரா சூரப்பன்தாங்கல் கிராமத்தைச் சேர்ந்த திரு. முருகேசன் என்பவரின் மகன் திரு. முனுசாமி என்பவர் கடந்த 12–7–2017 அன்று விவசாயக் கிணறுக்கு நீர் பாய்ச்ச மின் பொத்தானை அழுத்தியபோது மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியும், கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், கோட்டூர் மலையாண்டிபட்டினம் கிராமத்தைச் சேர்ந்த திரு. பழனிசாமி என்பவரின் மகன் திரு. ஜானகிராமன் என்பவர் கடந்த 19–5–2017 அன்று, தனக்குச் சொந்தமான விவசாய நிலத்தில் மின் கம்பி அறுந்து விழுந்ததில் உயிரிழந்தார் என்ற செய்தியும் அறிந்து நான் மிகவும் துயரமடைந்தேன். மேற்கண்ட சம்பவங்களில் உயிரிழந்த திரு. செந்தில்குமார், திரு. முனுசாமி மற்றும் திரு. ஜானகிராமன் ஆகியோரின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொண்டு, அவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.3 இலட்சம் ரூபாயை முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதிக் கோரிக்கைகளையும், கவன ஈர்ப்பாகக் கொடுத்தவற்றையும் மாண்புமிகு அமைச்சர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கின்றனர். கவன ஈர்ப்பு கொடுத்தது ஏற்கெனவே அவையிலே எழுப்பப்பட்டு ஆய்விலே இருக்கின்றன. மீதி இருப்பனவற்றை நான் அமைச்சர் பெருமக்களுடைய கவனத்திற்கு அனுப்பி வைக்கிறேன். உரிய நடவடிக்கையை அவர்கள் எடுப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

(ஓ) வேலூர் சட்டக் கல்லூரியில் 5 ஆண்டு சட்டப் படிப்பு தொடங்குதல்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூரில் இருக்கின்ற சட்டக் கல்லூரியிலே 3 ஆண்டு சட்டப் படிப்பு நடத்தப்பட்டு வருகிறது. அந்தச் சட்டக் கல்லூரியிலே 5 ஆண்டு சட்டப் படிப்பை இந்த ஆண்டே தொடங்க வேண்டுமென்ற கோரிக்கையை மாண்புமிகு சோழிங்கநல்லூர்*